நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் (நக4)துறை
தலைமை செயலகம்,
சென்னை – 9

கடிதம் எண். 6655/நக4(2)/09–1, நாள் :12.3.09

அனுப்புநர்
டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
சென்னை –5.

பேரூராட்சிகளின் இயக்குநர்,
சென்னை–108.

ஆணையர்,
சென்னை மாநகராட்சி,
சென்னை–3.

ஐயா,

பொருள் குத்தகை – நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் – குத்தகையைப் புதுப்பித்தல் குறித்து திருத்திய நடைமுறைகள் – ஆணைகள் வெளியிடப்பட்டது – தெளிவுரை கோருதல் – தொடர்பாக.

பார்வை : 1) அரசாணை (நிலை) எண்.92, நக(ம)குவ (நக4) துறை,
நாள் 3.7.07
2) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம்
ந.க.எண்.10342/09/ஆர்3 நாள் 27.2.07

---

அரசாணை (நிலை) எண்.92, நக(ம)குவ (நக4) துறை, நாள் 3.7.07–ல் நகராட்சிக் கடைகள், ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்குக் குத்தகை விடப்படலாம், மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைந்த பின், அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும் என்றும், மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை 15 (பதினைந்து) சதவீதம் உயர்த்தப்படும் (இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்) என்றும், ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்றும் தற்போதைய குத்தகைதாரர்களுக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட குத்தகை தொகையில் மேற்கொண்டு ஒன்பது ஆண்டுகளுக்கு குத்தகை கால [illegible] அளிக்கலாம் என்றும்

குத்தகைதாரர் ஒப்புக் கொள்ளவில்லையானால் அச்சொத்து பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட வேண்டும் என்றும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2) இந்நிலையில் பார்வை இரண்டிலுள்ள தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி பல குத்தகை இனங்கள் தற்போழுது 9 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் என முடிவுற்ற நிலையில் உள்ளது என்றும், ஏற்கனவே பல ஆண்டுகளாகக் குத்தகை நீட்டிப்புப் பெறும் கடைகளுக்கு அரசு ஆணை பிறப்பிக்கப்படும் நாளில் இருந்து திருத்தி அமைக்கப்பட்ட வாய்பு நிபந்தனைகள் பொருந்தும் எனக் கருதப்படுவதில்லை, எனவே ஏற்கனவே உள்ள கடைகள் மற்றும் நிலங்களுக்கு அரசு ஆணை வெளியிடுவதற்கு முன்னர் அவர்கள் எத்தனை ஆண்டுகள் குத்தகை உரிமம் அனுபவித்திருந்தாலும் அரசு ஆணை (நிலை எண்.) 92, வெளியிட்ட நாளான 3.7.2007-ல் இருந்து முதல் கட்டமாக 9 ஆண்டுகளும், பின்னர் மறுமதிப்பீட்டிற்கும் பின் அடுத்த 9 ஆண்டுகள் குத்தகை நீட்டிப்பு வழங்கலாம் எனவும் கருதப்படும் என்பதை அரசு உறுதிசெய்கிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசுச் செயலாளருக்காக.